FWC

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**தவணைப் பரீட்சை, மார்ச் - 2020**
**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, March - 2020**

| தரம் :- 12 (2021) | தமிழ் | நேரம் :- 3 மணித்தியாலம் |
|---|---|---|

❖ **பகுதி I இல் மூன்று வினாக்களுக்கும் பகுதி II இல் உள்ள 'அ' பிரிவில் ஒரு வினாவுக்கும் 'ஆ' பிரிவில் ஒரு வினாவுக்குமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

**பகுதி I**

1) **பின்வரும் செய்யுள்களை வாசித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

அ) விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி
மறந்தனம் துறந்த காழ் முளை அகைய
நெய் பெய் தீம்பால் பெய்தினிது வளர்ப்ப
நும்மினுஞ் சிறந்தது நுவ்வை ஆகுமென்று
அன்னை கூறினள். புன்னையது சிறப்பே
அம்ம நாணுதும் நும்மொடு நகையே
விருந்திற் பாணர் விளரிசை கடுப்ப
வலம்புரி வான்கோடு நரலும் இலங்கு நீர்த்
துறைகெழு நீழல் பிறவு மாருளவே

i) இச் செய்யுளில் தோழியின் மதிநுட்பம் எவ்வாறு வெளிப்படுகின்றது?

ii) தலைவனின் நாட்டு வளம் எவ்வாறு சிறப்பிக்கப்படுகின்றது?

iii) பின்வரும் சொற்களின் பொருளைத் தருக.
ஆயம், காழ், கோடு, நுவ்வை

(10 புள்ளிகள்)

ஆ) ஆழ நெடுந்திரை ஆறு கடந்து இவர் போவாரோ
வேழ நெடும்படை கண்டு விலங்கிடும் வில்லானோ?
தோழமை என்று அவர் சொல்லிய சொல் ஒரு சொல் அன்றோ?
ஏழமை வேடன் இறந்திலன் என்று எனை ஏசாரோ?

i) இச் செய்யுள் இடம்பெறும் சந்தர்ப்பத்தினை விளக்குக.

ii) குகனின் சீற்றம் எவ்வாறு எடுத்துக்காட்டப்படுகிறது?

iii) குகன் இராமன் மீது கொண்ட பற்றை எவ்வாறு வெளிப்படுத்துகின்றான்?

(10 புள்ளிகள்)

2) **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
**ஒவ்வொரு கூற்றுக்களுக்கும் கீழே ஐந்து விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப்பொருத்தமான விடையைத் தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புக் குறிக்குள் எழுதுக.**

1. கூட்டுயிர்களாக அமைவன.
   1) இ ஈ   2) ஆ ஓ   3) இ ஐ   4) ஊ ஏ   5) ஐ ஔ   (..........)

2. பின்வருவனவற்றுள் குற்றியலுகரமாக அமையாதது.
   1) சங்கு   2) அன்பு   3) யாது   4) வாழ்வு   5) புரியாது   (..........)

3. பின்வருவனவற்றுள் வேற்றுநிலை மெய்ம்மயக்கமும் உடனிலை மெய்ம்மயக்கமும் இடம் பெற்ற சொல்.
   1) வீழ்ந்தான்   2) வாழ்க்கை   3) சூரியக்கதிர்
   4) சித்திரித்தான்   5) முற்றுப்பெற்றது   (..........)

4. பின்வருவனவற்றுள் காரண இடுகுறிப்பெயராக அமைவது.
   1) விலங்கு   2) மாலை   3) மரம்   4) நாற்காலி   5) முல்லை   (..........)

5. பின்வருவனவற்றுள் பகுதி இரட்டித்துக் காலம் காட்டிய சொல்.
   1) பெற்றான்   2) புகழ்ந்தான்   3) வரைந்தான்
   4) கூடினார்கள்   5) செதுக்கினான்   (..........)

6. இன்று எல்லோரும் தொழிலுக்காகக் கல்வி கற்கின்றனர் என்பதில் வந்துள்ள வேற்றுமைப் பொருள்.
   1) அடைதல்   2) கருவி   3) கிழமை
   4) நிமித்தம்   5) ஏது   (..........)

7. மொழியிடையில் தன்னுடன் தான் மயங்காத மெய்கள்.
   1) ர் ழ்   2) ய், வ்   3) ள், ல்   4) ர் ற்   5) ழ் ந்   (..........)

8. கண்டான் என்பதன் பகுதி
   1) கண்   2) காண்   3) கண்டு   4) கண்ட   5) காட்சி   (..........)

9. பின்வருவனவற்றுள் உருபு இன்றிப் பெயர் ஈறு திரிபடைவதன் மூலம் உணர்த்தப்படும் வேற்றுமை
   1) இடம்   2) உடைமை   3) எழுவாய்
   4) விளி   5) கருவி   (..........)

10. பின்வருனவற்றுள் கூட்டுப்பெயராக அமைவது.
   1) நீரேரி   2) மலர்ச்சி   3) வேலைக்காரன்
   4) தமிழியல்   5) அறிவாளி   (..........)

(10 x 2 = 20 புள்ளிகள்)

3) **பின்வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பைத் தெரிந்து 300 – 350 சொற்களில் அமையுமாறு கட்டுரை எழுதுக.**

1) மனிதகுலம் எதிர்நோக்கும் அச்சுறுத்தல்கள்.

2) தமிழ்மொழி வளர்ச்சியில் நவீன ஊடகங்கள்.

3) இன்றைய உணவுப்பழக்கமும் ஆரோக்கியமும்.

4) இலக்கியங்களும் மனித விழுமியங்களும்.

5) கல்வித்துறையில் உலகமயமாதலின் தாக்கங்கள்.

(20 புள்ளிகள்)

## பகுதி II

### 'அ' பிரிவு

4) திருவள்ளுவர் 'பெரியாரைத் துணைக்கோடல்' என்ற அதிகாரத்தில் கூறுவனவற்றை ஆதாரமாகக் கொண்டு பின்வருவனவற்றைத் தெளிவுபடுத்துக.

அ) அரசன் துணையாகக் கொள்ளும் பெரியாரின் பண்புகள்
ஆ) பெரியாரைத் துணைக்கோடலின் சிறப்பு
இ) பெரியாரைத் துணைக்கோடலின் பயன்
ஈ) பெரியாரைத் துணையாகக் கொள்ளாமையின் குற்றம்.

(20 புள்ளிகள்)

5) குகப்படலத்தில் பரதனது படை கங்கைக் கரையை அடைந்தது முதல் பரதன் மேல் சீற்றம் கொண்ட குகன் படை திரட்டியது வரையுள்ள பகுதியை ஆதாரமாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

அ) பரதனுடன் வந்த சேனையின் தோற்றம்
ஆ) பரத சேனையைக் கண்ட குகனது சீற்றம்
இ) குகன் வீரத்தோடு போருக்குத் தயாரானமை.
ஈ) பயின்றுள்ள அணிகளின் சிறப்பு

(20 புள்ளிகள்)

6) 'தேர்' என்ற சிறுகதையை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

அ) முகத்தார் குடும்பத்தின் மீது கொண்ட ஈடுபாடு
ஆ) மனித மனங்களின் பல்வகை இயல்புகளும் எதிர்பார்ப்புகளும்
இ) கதாசிரியரின் மொழிநடை

(20 புள்ளிகள்)

## ‘ஆ’ பிரிவு

7) அ) பதினெண் கீழ்க்கணக்கு நூல்களை வகைப்படுத்திக் காட்டுக.

ஆ) சங்கமருவிய காலத்தில் எழுந்த பக்தி இலக்கியங்களைக் கூறி அவற்றின் பண்புகளை விளக்குக.

இ) தமிழிலக்கிய வரலாற்றில் காரைக் காலம்மையாரின் பங்களிப்பினை மதிப்பிடுக.

(20 புள்ளிகள்)

8) அ) ஆரியச் சக்கரவர்த்திகள் கால இலக்கியங்களை வகைப்படுத்துக.

ஆ) அக்கால இலக்கியங்களின்

i) பொருள் மரபு சார்ந்த பண்புகள்

ii) செய்யுள் மரபு சார்ந்த பண்புகள்

iii) மொழி மரபு சார்ந்த பண்புகள்.

என்பவற்றை விளக்குக.

(20 புள்ளிகள்)

9) அ) i) பின்வரும் வாக்கியத்திலுள்ள பொருள் மயக்கத்தை இனங்கண்டு திருத்தி எழுதுக.
கிராமத்தையே அதிர வைத்த அந்த வெடிச்சத்தத்தைக் கேட்டதிலிருந்து ஓரளவு தேறியிருந்த தாயாரின் மனநிலை மீண்டும் பாதிக்கப்பட்டது.

ii) பின்வரும் வாக்கியத்திலுள்ள வழுவைச் சுட்டிக்காட்டி வழுவற்ற வகையில் வாக்கியத்தைத் திருத்தி எழுதுக.
மிகவும் விரிவானதும் பயன்பாடு மிக்கதும் பலராலும் அறியப்படாததுமான செய்திகளுக்குச் செய்தித்தாள்கள் முக்கியத்துவம் வழங்குகின்றன.

iii) பின்வரும் வாக்கியத்தில் உள்ள விடயங்கள் யாவும் ஒரே வாக்கிய அமைப்பில் வரத்தக்க வகையில் எழுதுக.

- சுப்பிரமணிய பாரதியார் இதழியற் துறையிலே ஈடுபட்டு உழைத்தார்.
- பல துறைகளையும் சார்ந்த கட்டுரைகளை எழுதினார்.
- புதினம், சிறுகதை என்ற புதிய வரவுகளிலும் தனது கைவண்ணத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

iv) பின்வரும் வாக்கியத்தில் உள்ள எழுவாய், பயனிலைகளைக் குறிப்பிடுக.
ஆலயம் தொழுவது சாலவும் நன்று

v) பின்வரும் சொற்களை அவற்றில் இடம்பெற்றுள்ள எழுத்துப் பிழைகளைத் திருத்தி சரியான முறையில் எழுதுக.

- இனப் பிரச்சனை
- கட்டட இடிபாடுகள்

ஆ) பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றினைப் பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.

i) ஆறாம் வேற்றுமை.

ii) குற்றியலுகரம்

iii) அறுவகைப் பெயர்கள்